பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம். பி.

மலர் : 16] சென்னை : கார்த்திகை 5 (20—11—68) புதன் ★ வெளியூர் : கார்த்திகை 6 (21—11—68) வியாழன் [இதழ் : 129

இதுவரை ரூ. 145-கோடி !

பொக்காரோ உருக்காலைக்குச் செலவு

பொக்காரோ உருக்காலைத் திட்டத்தின் முதல்கட்ட வேலைக்காக 1968 அக்டோபர் முடிய ரூ. 145 கோடி செலவிடப்பட்டிருப்பதாக உருக்குத் துறைத் துணையமைச்சர் திரு. சௌதாரி ராம் சேவக், மக்களவையில்ஒரு கேள்விக்கு எழுத்துமூலம் அளித்த பதிலில் கூறியிருக்கிருர்.

முதற்கட்ட வேலை 1971 டிசம்பருக்குள் முடியவேண்டும் என்று காலவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்த இயலாதாம்

பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறது டெல்லி

கழக உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி கேள்விக்கு தினேஷ் சிங் திமிரான பதில்

புதுடில்லி, நவ. 19—

"மூடப்பட்ட எல்லாப் பஞ்சாலைகளையும் ஏற்றுநடத்தும் பொறுப்பை அரசு மேற்கொள்ள முடியாது" என்று மக்களவையில் வணிக அமைச்சர் தினேஷ் சிங் கூறினுர்.

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர்.

"பஞ்சாலைத் துறையில், 'தவருகத் திட்டமிடப்பட்ட' கொள்கையே இப்போதைய நெருக்கடிக்குக் காரணம்" என்று கிருஷ்ணமூர்த்தி கூறினுர்.

"தமிழகத்திலும் நாட்டின் மற்ற பகுதிகளிலும் மூடப்பட்டுள்ள ஆலைகளை மீண்டும் திறக்க அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது?" என்று கிருஷ்ணமூர்த்தி கேட்டார்.

"இப்பிரச்சினையை, மந்திரம் அல்லது மாயாஜாலத்தின் மூலம் தீர்க்க முடியாது" என்று அமைச்சர் தினேஷ் சிங், அகங்காரமாகப் பதில் கூறினுர் ; 'இப்பிரச்சினைக்கு அரசு மட்டுமே பொறுப்பல்ல ; மூடப்பட்ட ஆலைகள் அனைத்தையும் ஏற்று நடத்தும் பொறுப்பை அரசு மேற்கொள்ள முடியாது" என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.

"பஞ்சாலைகளைத் தேசியமயமாக்கும் திட்டம் எதுவும் இல்லை" என்றும் அவர் குறிப்பிட்டார்.

கல்லூரி மாணவர் தேர்தலில் காங்கிரசார் கைவரிசை

காரில்வந்த குண்டர்கள் சோடாபுட்டி விசினர்-- மாணவத் தலைவர்கள் தாக்கப்பட்டனர்

சென்னை, நவ. 19—

சென்னை அனைத்துக் கல்லூரி மாணவர் தேர்தலுக்கான வேட்பாளர் விண்ணப்பத் தாள் இறுதிப் பரிசீலனை செய்ய இன்று சென்னை மாநிலக் கல்லூரியில் ,அமைப்பாளர் திரு. இராதாகிருஷ்ணன், (ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி) தலைமையில் அனைத்துக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர் தலைவர்கள் கூடினர்.

பரிசீலனையின்போது, 'செயலாளர் பதவிக்குப் போட்டியிட்ட சட்டக் கல்லூரி மாணவப் பேரவைச் செயலாளர் ஜின்னுவின் வேட்பு மனு செல்லத்தக்கது' என்று அமைப்பாளர் அறிவித்த போது, தங்கள் தோல்வி உறுதி' என்று உணர்ந்துகொண்ட காங்கிரசு மாணவர்கள் கூச்சலும் குழப்பமும் கிளப்பினர் ; பலர் கைமுஷ்டிகளை உயர்த்தி--நிதானமற்ற நிலையில்--அமைப்பாளர் இராதாகிருஷ்ணனைத் தாக்க முயன்றனர். உடனே அமைப்பாளர் கூட்டத்தை ஒத்திவைத்துவிட்டு வெளியேறினுர்.

வெளியே வந்தபோது அங்கே கூடியிருந்த மாணவர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. மாணவர்கள் மத்தியில் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தபோது, கூடியிருந்த காங்கிரசு மாணவர்கள், மற்ற மாணவர்களைத் தாக்க ஆரம்பித்தனர் : உடனே வெளியேயிருந்துவந்த ஒரு கருப்புக் காரிலிருந்து சில கதர் உடுத்திய குண்டர்கள் மாணவர் கூட்டத்தை நோக்கி சோடா புட்டிகளை வீசினர் ; மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டது.

தகவல் கிடைத்த போலீசார் இடத்துக்கு விரைந்தனர் ; கார் டிரைவரைப் போலீசார் அழைத்துபோய் காவலில் வைத்து விசாரித்ததாகக் கூறப்படுகிறது.

அந்தக் கார், காங்கிரசு சார்புடைய மாணவர்களால், மாணவர் தேர்தல் வேலைக்காகப் பயன்படுத்தப்பட்டதாகும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

கதர் உடுத்திய குண்டர்களின் சோடாபுட்டி வீச்சால், சட்டக் கல்லூரி மாணவர் ஜின்னு தம் தோள்பட்டையில் காயமடைந்தார் ; அவர் மத்திய மருத்துவமனையில் சோதிக்கப்பட்டார் ; எக்ஸ்ரே எடுக்கப்பட்டது தோள்பட்டையில் கட்டுப்போடப்பட்டுள்ளது.

அமைப்பாளர் இராதாகிருஷ்ணனுக்கு கைவிரல்களில் அடிபட்டது.

மேலும், சென்னைக் கல்லூரி மாணவர்கள் பலர் இதில் காயமுற்றனர் ; சோடாபுட்டிகள் வீசப்பட்டதில் காங்கிரசு ஆதரவு மாணவர் ஒருவரும் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

செய்தி அறிந்த போலீசார் உடனடியாகச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்று அமைதியை உண்டாக்கினர்.

மாநிலக் கல்லூரி முதல்வரும் மாணவர்களிடையே வந்து அமைதியை உருவாக்கினுர்.

இதன் தொடர்பாக ஜின்னு, காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு தந்துள்ளார்.

தேவையற்ற மசோதா

கடும் எதிர்ப்புக்கிடையே நிறைவேற்றம்

புதுடில்லி, நவ. 19—

கடுமையான விவாதத்திற்குப் பின், மக்களவையில், தொழில் பாதுகாப்புப் படை மசோதா நிறைவேறியது.

மசோதாவை ஆதரித்து 81 ஓட்டுகளும், எதிர்த்து 22 ஓட்டுகளும் கிடைத்தன.

'தேவைப்படாத' இம்மசோதாவைத் திரும்பப் பெறுமாறு முழங்கிக்கொண்டே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அனைவரும், அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

மத்திய அரசு ஊழியர்கள் விவகாரம்

புதுடில்லி, நவ. 19—

அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட மத்திய அரசு ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை பற்றி மறுபரிசீலனை செய்யுமாறு மாநிலங்களவையில் உறுப்பினர்கள் பலர் தலைமையமைச்சரைக் கேட்டுக் கொண்டனர்.

'என்னப்பா -- நீ கூட இப்படிப் பண்ணலாமா?'

தி. மு. கழக உறுப்பினரிடம் சஞ்சீவியார் கேள்வி

மக்களவையில் ஒலித்த தமிழ்க் குரல்

புதுடில்லி, நவ. 19—

நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் சஞ்சீவியார் நமது கழக உறுப்பினரைப் பார்த்துத் தமிழில் பேசினுர்.

கழக உறுப்பினர் வெ. கிருஷ்ணமூர்த்தி ஒரு கட்டத்தில் உணர்ச்சிவயப்பட்டபோது, 'என்னப்பா, நீ கூட இப்படிப் பண்ணலாமா?' என்று அவர் தமிழில் கேட்டார்.

செப்டம்பர் 19-ம் நாளன்று மத்திய அரசு ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்தது சம்பந்தமாக உள்துறை அமைச்சர் சவான் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதியைக் கண்டித்துத் தோழர் வி.கிருஷ்ணமூர்த்தி உணர்ச்சி வயப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தார்.

"வேலைநிறுத்தத்தைத் தடை செய்ய நாடாளுமன்றம் சட்டம் எதுவும் இயற்றவில்லை ; அவசரச் சட்டம்தான் கொண்டுவரப்பட்டது ; இந்த விஷயத்தில் சவானின் அறிக்கை தவருனது" என்று கிருஷ்ணமூர்த்தி கூறினுர்.

(4-ம் பக்கம் பார்க்க)

டெல்லியின் பிரபுத்துவமனப்பான்மை

இடித்துரைக்கிருர் முன்னுள் தலைமை நீதிபதி

'ஆங்கிலம் இல்லையேல் இந்திய நாடு தனிமைப்பட்டுவிடும்' என எச்சரிக்கை

ஆமதாபாத், நவ. 20—

"நாட்டைப் பல சிக்கல்கள் எதிர்நோக்கியுள்ளன ; இதைக் கருதித் தற்போது மொழிச் சிக்கலைக் கிடப்பில் போடவேண்டும்.

"ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும்; அது இல்லாவிடில் இந்தியா தனிமைப்படுத்தப்பட்டுவிடும்.

"தான் ஏதோ ஒரு பிரபு போலவும், மாநிலங்கள் ஏதோ தனக்குக் கீழ்ப்பட்டவைகள் போலவும் கருதி, மாநிலங்களை மத்திய அரசு நடத்தக்கூடாது"

என்று, இந்தியத் தலைமை நீதிமன்ற முன்னுள் தலைமை நீதிபதி கே. சுப்பா ராவ், சுட்டிக்காட்டி அறிவுறுத்தினுர்.

"இந்திய அரசியலில் மோதுதல்கள்" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில், மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"மத்திய ஆட்சி மிகவும் வலிமையுடையதாக இருக்கிறது. அரசியல் சட்டம்தான் மத்திய ஆட்சிக்கு இவ்வளவு விரிவான அதிகாரங்களைத் தந்துள்ளது ; பிரிவினை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய முன்னுள் மன்னர்களையும்கொண்ட கூட்டாட்சி மாநிலங்களைக் கையாள வேண்டிவரும் என்பதால் மத்திய அரசுக்கு அரசியல் சட்டம் அவ்வளவு அதிகாரங்களைத் தந்தது.

கடந்த பொதுத் தேர்தலின் விளைவாக, மாநில மட்டங்களில் பல்வேறு கட்சிகள் ஆட்சிக்கு வந்துள்ளன ; எனவே, தற்போதைய மத்திய - மாநில மோதல்கள் தவிர்க்க முடியாதனவேயாகும்.

ஏட்டில் இருப்பதற்கு மாருகவே அரசியல் சட்டம் செயல்படுகிறது.

சர்வாதிகாரக் கொள்கையில் நம்பிக்கை கொண்ட அரசியல் கட்சிகளைத் தடை செய்வதை நான் எதிர்க்கிறேன் ; ஏனெனில், அவை பதவிக்கு வந்தால், பதவிக்கு வந்தபின் அரசியல் சட்டப்படி நடக்கும்படி நெருக்கப்பட்டே தீரும்; எனவே, 'அரசியல் சட்டம் சிதைக்கப்பட்டுவிடும்' என அஞ்சவேண்டியது ஏதுமில்லை."

அணைகளைக் கட்டுவதில் விரைவு-சிக்கனம்காட்டுக

ஆறுகளை இணைத்துப் பாசன வசதியைப் பரவலாக்கலாம்

நாட்டின் வளம்பெருக வி. வி. கிரியின் யோசனை

புதுமைகளைக் கண்டுபிடிக்க விஞ்ஞானிகட்கு வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 20—

உணவுத் துறையில் நாட்டின் தேவை நிறைவு பெறுவதை எஞ்சினியர்கள் இலக்காகக் கொள்ளவேண்டும்; அணைக்கட்டுகளை விரைவாகவும், சிக்கனமாகவும் அமைப்பதற்கான திட்டங்களை அவர்கள் வகுக்க வேண்டும்; இவ்வாறு செய்தால், ஐந்தாண்டுத் திட்டங்களில் குறைந்த நிதி வசதி கிடைத்தாலும்—அதைக் கொண்டு அதிகமான பகுதிகளுக்கு நன்மை காண முடியும்.

"உலகம் முழுவதிலும் விஞ்ஞானப் புரட்சி ஏற்பட்டு வருகிறது; புதியவைகள் பல கண்டுபிடிக்கப்படும் காலத்தில் நாம் வாழ்கிறோம்; ஆகவே, 'இவ்வளவு தூரம் முன்னேறினால் போதும்; அதற்குமேல் வேண்டாம்' என்று நினைப்பது பேதமையாகும்.

'விஞ்ஞான ஆராய்ச்சி சம்பந்தமாக மற்ற நாடுகள் அடைந்துள்ள நிலையை நாமும் எட்டிப்பிடிக்க வேண்டும்; இதற்குக் கூடுதலான நிதி வசதி தேவை; சிறந்த சாதனங்களைக் கொண்ட சோதனை நிலையங்களும், அவற்றில் பணிபுரிபவர்களுக்கு திருப்திகரமான வேலை நிபந்தனைகளும் இருக்க வேண்டும்"

இவ்வாறு துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி அவர்கள், மத்திய நீர்ப்பாசன விசைக் கழக ஆண்டுக் கூட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில் அறிவுறுத்தியிருக்கிறார்; இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

இமயமலை முதல் கன்னியாகுமரி முனைவரையில் உள்ள எல்லா நதிகளையும் இணைப்பதற்கான ஒரு திட்டத்தை நம் நாட்டு எஞ்சினியர்கள் தயாரிக்கவேண்டும; உணவுத் துறையில் நாடு தன்னிறைவு பெறுவதற்கு இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு எல்லா நதிகளையும் இணைப்பதற்குக் கோடிக்கணக்கான ரூபாய் நாம் செலவிட வேண்டியிருக்கும் என்றாலும், இதை நாம் செய்து முடித்துவிட்டால் நாடு முழுவதும் பாசன வசதிக்கான நீர் சமமாகக் கிடைக்கும்.

நம் நாட்டில் பல மாபெரும் நதிகள் உள்ளன; அவை அனைத்தையும் ஒன்றாக இணைத்துவிட்டால், நீர்வழிப் போக்குவரத்துக்கும் அதைப் பயன்படுத்தலாம். பயணிகள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் செல்லவும், சரக்குகளை அனுப்பவும் பயன்படுத்தலாம்.

நான்காவது திட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்குபோதுமான நிதி ஒதுக்கீடு இருக்க வேண்டும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள முடியவில்லை என்றால் அவற்றுக்கு அடுத்தபடியாக உள்ளவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும். பெரிய திட்டங்களையும் படிப்படியாக மேற்கொள்ளவேண்டும்.

கிராமப்புறங்களை மின்சார மயமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். விவசாய-தொழில் துறைகளில் நாம் காணும் வளர்ச்சியையொட்டித்தான் இதர துறைகளில் நாம் முன்னேற முடியும்; ஆகவே அடுத்துவரும் ஆண்டுகளில் இந்த இரண்டு துறைகளிலும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நாம் முனைய வேண்டும்."

71,000 கிராமங்களுக்கு மின்சார வசதி

நாடாளுமன்றத்தில் தகவல்

புதுடில்லி, நவ. 19—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்தியாவில் புதிதாக 71,000 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துதரப்படும்; எல்லா மாநிலங்களிலும், மின்சாரக் கட்டணத்தை ஒரே மாதிரியாக ஆக்குவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன"

என்று நாடாளுமன்றத்தில், நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கே. எல். ராவ் கூறியிருக்கிறார்.

அரை கோடி பேருக்கு அறுவைச் சிகிச்சை!

கருத்தடை திட்டத்தின் சாதனை

புதுடில்லி, நவ. 19—

கருத்தடைத் திட்டத்தின் மூலம் இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றி, நாடாளுமன்றத்தில் நேற்று கேள்விகள் கேட்கப்பட்டன; சுகாதாரத் துறை அமைச்சர் சந்திரசேகர், கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"கருத்தடைத் திட்டம் தொடங்கியது முதல், இதுவரையில் 49,98,570 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

"இது தவிர, 26,04,976 பேருக்கு 'லூப்' எனும் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டிருக்கிறது.

"இவை மட்டுமன்றி, 1963 முதல் 1968-வரையில், 8,09,00,000 'காண்டோம்' (கருத்தடை உறைகள்) வழங்கப்பட்டிருக்கிறது; இதே காலத்தில், 3,71,00,000 கருத்தடை மாத்திரைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன."

ஆக்ரா மாணவர்கள் வன்செயல்

ஆக்ரா, நவ. 19—

ஆக்ராவைச் சேர்ந்த மாணவர்கள் சினிமாக் கொட்டகைகளைத் தாக்கியும், பஸ்களை அடித்து நொறுக்கியும் வன்செயல்களில் இறங்கினர்.

உத்தரப் பிரதேச மாணவத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வேலைநிறுத்தம் செய்த மாணவர்கள்தான், இந்த வன்செயல்களையும் புரிந்தனர்; இதன் விளைவாகத் திரைப் படக் காட்சிகளெல்லாம் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (2)

[எஸ். ஆர்.]

பாலமதி மலைப் பாதை--- பாராட்டத்தக்க முயற்சி!

'அதோ பாருங்கள்' என்றார் -- எங்களை வழி நடத்திச் சென்ற அதிகாரி; தூக்க முடியாத விறகுச் சுமையினைத் தலையில் வைத்துக் கொண்டு நடக்க முடியாமல் நடந்து வந்து கொண்டிருந்தார் ஒரு பெண்மணி.

கடல் மட்டத்துக்கு மேல் 1,840 அடி உயரமுள்ள பாலமதி மலையில் நாங்கள் பார்த்த காட்சி இது.

வட ஆற்காடு மாவட்டத்தின் தலைநகர் வேலூருக்கு மூன்று கல் கிழக்கே இருக்கிறது இந்த மலை. அந்த அளவு உயரத்தில் -- 972 பேர்களைக் கொண்டு -- மலையின் பெயராலேயே அழைக்கப்படும் ஒரு கிராமம்; அதற்கும் அப்பால் வெங்கடாபுரம், குப்பம், புங்கனூர், கவனூர் போன்ற சிற்றூர்கள்.

அருகே உள்ள வேலூருக்கு வருவதென்றால், கல்லும் முள்ளும் மட்டுமன்றி மேடு பள்ளமுமாக உள்ள பாறைப் பாதைகளைக் கடந்து 1840 அடிச்குக் கீழே இறங்கிவந்துதான் அன்றாட வாழ்க்கையை நடத்த வேண்டும் -- அந்தச் சிற்றூர்களிலுள்ள மக்கள்! அப்படி அப்பெண்மணி நடந்து வந்துகொண்டிருந்த ஒரு காட்சியைத்தான் காட்டினார் அதிகாரி.

மலையின் மீதுள்ள சிற்றூர்களுக்கு மட்டுமல்ல -- மலைக்குக் கீழேயுள்ள திமிரி, ஆற்காடு



பாலமதி மலைப் பாதை

போன்ற சிறிய நகரங்களையும் தனது உருவத்தால் தூரத்தே ஒதுக்கி வைத்திருக்கிறது பாலமதி மலை.

சிறு நகரங்களையும் இணைக்க வேண்டும்--உயரே உள்ள சிற்றூர் மக்களுக்கும் வசதியாக இருக்க வேணடும் என்ற அடிப்படையில் வேலூர், கணியம்பாடி, திமிரி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் இணைந்த முயற்சியால் ரூ. 2,38,000 செலவில் ஒன்றரை மைல் நீள மலைப்பாதை ஒன்று உருவாக்கும் கூட்டுப் பணி, கடந்த ஜூலை மாதம் முதல் துவங்கியிருக்கிறது. ஏறக்குறைய 5 பர்லாங் தூரமுள்ள மலைப் பாதையினை உருவாக்கியிருக்கும் இப்பாராட்டத்தக்க முயற்சியில் சிறப்பான பெருமை ஒன்று இருக்கிறது.

அரசினரிடமிருந்து எவ்வித உதவியும் பெறாமலேயே -- நூற்றுக்கு நூறு தங்கள் தங்கள் நிதி வருவாயிலிருந்தே நிறுவ ஆரம்பித்திருக்கும் ஒரு கூட்டு முயற்சி இது!

கோவை மாவட்ட ஆட்சியாளர் திரு. பாங்கோவிடம், 'ஊராட்சி ஒன்றியங்களின் இது போன்றதோர் கூட்டு முயற்சி உங்கள் மாவட்டத்தில் உண்டா?' எனக் கேட்டபோது, ஆர்வத்துடன் அவர் இதுபற்றி மேலும் தகவல்களைக் கேட்டறிந்து, 'மிக எடுத்துக்காட்டான திட்டம்; எனது மாவட்டத்தில் இதுவரையில் இல்லை; ஆனால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக இருககிறதே' எனப் பாராட்டினார்.

'அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்' எனத் திராவிட முன்னேற்றக் கழகம் கூறிவருவதை, 'இது, மத்திய -- மாநில அரசுகளின் பிரச்சினை' என்று மட்டுமே கருதிவந்தவர்கள், கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட மாநில அரசில் அந்தக் கொள்கை எவ்வாறு பலனளிக்கக் கூடிய வகையில் இயங்க ஆரம்பித்திருக்கிறது என்பதற்கு, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் இயக்கம் நல்ல எடுத்துக்காட்டாக இருக்கிறது.

திருத்தியமைக்கப்பட்டிருக்கிற ஊராட்சி முறை, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாக இயங்கிவருகிறது. மக்கள் தரும் வரிப் பணம் நேரடியாகவும், உடனடியாகவும் அவர்களுக்குத் திருப்பவும் பயன்படும்வகையில் இந்த மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்கள் செயல்படுகின்றன!

1966-ம் ஆண்டில் விதிக்கப்பட்டிருந்த லோகல் செஸ் சர்சார்ஜ் 54 காசு. ஓர் ஒன்றியத்தில் இது எவ்வளவு வசூலாகிறதோ அந்த அளவுத் தொகையினை மானியமாக மாநில அரசு, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தந்துவந்தது.

தற்போது இந்த மாவட்டத்தில் மேற்கண்ட வரி விதிப்பு ஒரு ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதனால், கூடுதலாகும் தொகைச்கு ஈடாக அதே அளவுத் தொகை அரசினரிடமிருந்து மானியமாகக் கிடைக்கிறது.

அரசிடமிருந்த அதிக அளவு உதவி பெற வேண்டுமென்பதற்காக ஊராட்சி ஒன்றியங்கள், மக்கள் ஒப்புதலுடன் திரட்டும் இத்தகைய கூடுதல் நிதி, பாலமதி மலைப் பாதை போன்ற பாராட்டுதலுக்குரிய முயற்சிகளுக்குப் பயன்படுகிறது.

காலதாமதத்தையும், அரசினருக்கு அதிகமான சிரமத்தையும் தவிர்க்கும் அருமையான திட்டம் இது!

வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 36 ஊராட்சி ஒன்றியங்கள் -- இதுபோன்ற வகையில் மட்டும் தங்களுக்குள்ளாகத் திரட்டும் தொகை ஆண்டொன்றுக்கு இப்போது ரூ. 53 இலட்சமாக உயர்ந்திருக்கிறது.

திட்டங்களைத் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளும் உரிமை மட்டுமல்ல -- அதனை நேரடிப் பொறுப்புடன் கண்காணிக்கும் கடமையும் அவர்களையே சார்ந்துவிடுவதால், செயலில் தரமும் பலனும் நிறைய கிடைக்கிறது.

பாலமதி மலைப் பாதை நிறைவேறியதும், அங்கே நீச்சல்குளம் -- பூங்கா அமைக்கும் திட்டங்களும் இருப்பதால், வேலூர் நகர மக்களுக்கு இது ஒரு 'சிறிய ஊட்டி -- ஏற்காடு' போல் ஆகிவிடும் என்பதில் ஐயமில்லை.

இந்த அடிப்படையில்தான் ஆட்சியாளர் திரு. பெல்லியப்பா, மாவட்ட நல நிதியிலிருந்துகூடக் கணிசமான தொகையை இத்திட்டத்துக்காகச் செலவழிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது.

மாவட்டத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சீரணி நிதியிலிருந்தும் ரூ. 13,000 இத்திட்டத்துக்குப் பயன்படுவதுடன், சீரணித் தொண்டர்களின் இலவச உழைப்பும் கிட்டிவருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

உலகில் நிகழும் தற்கொலைகள்

உலக சுகாதார நிறுவனம் வெளியிடும் தகவல்

ஐ. நா., நவ. 20—

தற்கொலை செய்து கொள்ளுவது பெண்களைவிட ஆண்களிடையேதான் அதிகமாகக் காணப்படுகிறது; அதிலும் குறிப்பாக — மூளைக்கோளாறு உள்ளவர்கள், குடிகாரர்கள், மணவிலக்குச் செய்துகொண்டோர், வேலையில்லாது திண்டாடும் வெளிநாட்டுக்காரர்கள், தனிக்கட்டையாக வாழ்பவர்கள், வீட்டைவிட்டு வெளியேறிய சிறுவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், வயது முதிர்ந்தவர்கள் ஆகியோர்தான் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

வயதுவந்தோர்கள் அதிக அளவில் தற்கொலை செய்துகொள்வதற்குரிய காரணம், உடல் நிலைக் கோளாறு -- மூளைக் கோளாறு -- சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்படுதல் -- காதலித்தவர் இறத்தல் -- தொழிலில் வருவாய் இழப்பு -- ஆகியவையே ஆகும்.

பல்கலைக் கழக மாணவர்கள் காதல் முறிவு, குடும்ப விவகாரம் உட்படத் தனிப்பட்ட குடும்பப் பிரச்சினைகளால் அதிகமாகத் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

நைஜீரியாவில் தற்கொலை செய்துகொள்பவர்களில் பெருமபாலோர் தூக்குப் போட்டுக்கொள்கின்றனர்.

பிரேசில் நாட்டில் நஞ்சருந்திச் சாகின்றனர்.

இங்கிலாந்து, வேல்ஸ் அயர்லாந்து ஆகிய நாடுகளில் நச்சு வாயுவை உட்கொண்டு சாகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஆண்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டும், பெண்கள் நஞ்சுண்டும், மூச்சடைத்துக் கொண்டும் சாகிறார்கள்!

பாசல், சுவிட்சர்லாந்தில் வீட்டு உபயோகத்துக்குப் பயன்படும் வாயுவைப் பயன்படுத்திச் செத்தார்கள்; வீட்டு உபயோக வாயுவில் நஞ்சு இல்லாமற் செய்தபின், தற்கொலை விகிதம் குறைந்தது; ஆனாலும், நீரில் மூழ்கி இறக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

முன்னேற்றமடைந்த 21 நாடுகளில் கணக்கெடுக்கப்பட்டதில், அங்கேரியில்தான் தற்கொலை விகிதம் அதிகம்; அதாவது (1961 முதல் 1963-ம் ஆண்டு வரை) அங்கு ஒவ்வொரு இலட்சம் பேருக்கும் 33.9 தற்கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன, இத்தாலியில்தான் மிகவும் குறைவு; அதாவது, ஒவ்வொரு இலட்சம் பேருக்கும் 7.1.

இத்தகவல்கள், உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள 84 பக்க புத்தகத்தில உள்ளன.

குறிஞ்சிப்பாடி

கருணாநிதி மன்றம்

குறிஞ்சிப்பாடி கருணாநிதி மன்றப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 13—11—68-ல் திரு. க. நாராயணசாமி தலைமையில நடைபெற்றபோது, கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: மா. வடிவேலு; செயலாளர்: சி. கலியமூர்த்தி; துணைச் செயலாளர்: ந. செகதீசன்; பொருளாளர்; ச. ரா. கலியபெருமாள்; நகரக் கழகப் பிரதிநிதி: கோ. கிருட்டிணமூர்த்தி; மற்றும் பதினான்கு செயற் குழு உறுப்பினர்கள்.

சாலைகளில் உள்ள இடையூறுகள் அகற்றப்படும்

நடை பாதைகள் தூய்மையாக இருக்க நடவடிக்கை

விழாச் செலவுகள் கட்டுப்படுத்தப்படும்

மாநகராட்சி அனைத்துக் கட்சிக் கூட்ட முடிவு — மேயர் வேலூர் நாராயணன் விளக்கம்

சென்னை, நவ. 19—

சென்னை நகர் நலப் பிரச்சினைகள் பற்றி விவாதிக்க மேயர் தலைமையில், மாநகராட்சியிலுள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்தில், நகரச் சாலைகளில் போக்குவரத்துக்குத் தடையாக உள்ளனவற்றை அகற்றும் திட்டத்திற்கு அனைவரும் ஒருமனதாக ஒப்புதல் அளித்தனர்.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் வருமாறு:—

திறப்பு விழாக்கள் நடத்துவதால் மாநகராட்சியின் பணம் செலவாவதுடன், அதிகாரிகளின் பணிகளும் பாதிக்கப்படுகின்றன; எனவே இனி, ரூ. 10,000-த்துக்கு மேற்பட்ட செலவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கே திறப்பு விழாக்கள் நடைபெறும்.

இராஜஸ்தான், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் பஞ்ச நிவாரண நிதிக்கு -- ஒவ்வொரு மாநிலத்துக்கும் -- ரூ. 5,000 வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சென்னைக்கு வருகை தரவிருக்கும் இலங்கைத் தலைமையமைச்சர் சேனநாயகாவுக்கு, மாநகராட்சி சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

ரூ. 1-கோடிக்குக் கடன் எழுப்ப மாநகராட்சிக்கு அரசு அனுமதி அளித்திருக்கிறது; கடன் திரட்டுவது குறித்துத் தொழில் அதிபர்கள், பாங்கி நிர்வாகிகள் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தப்படும்.

மாநகராட்சியின் பணிகளுக்கு அரசிடம் ரூ. 2-கோடி மானியமாகக் கோர முதலமைச்சர், உள்ளாட்சித் துறையமைச்சர் ஆகியோரைத் தூதுக் குழு ஒன்று சந்திக்கும்.

மெரினா கடற்கரை மேலும் அழகு படுத்தப்படும்; இதுபற்றிப் பொதுப் பணித் துறையுடன் கலந்துரையாடி ஆவன செய்யப்படும்.

செய்தியாளர்களிடம் மேயர் விளக்கம்

மேயர் வேலூர் நாராயணன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"சென்னை நகர வீதிகளில் கால் நடைகள் திரிவதைத் தடுக்கவும், நடைபாதைகளில் உள்ள இடையூறுகளை அகற்றவும் விரைவில், தீவிர இயக்கம் ஒன்று துவங்கப்படும்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட பலதரப்பட்ட மக்களுடன் இதுபற்றிக் கலந்துரையாடப்பட்டது; 'வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டிருக்கும் இவ்விரு தொல்லைகளையும் முதலில் கவனிக்கவேண்டும்' என்று அனைவருமே ஒருமனதாகக் கருத்துத் தெரிவித்தனர்.

நடைபாதைகளை இடையூறுகள் இல்லாமலும் தூய்மையாகவும் வைத்திருக்க மாநகராட்சி அதிகாரிகளுடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

நடைபாதைகளில் உள்ள சில்லறைக் கடைகள்தான் முக்கிய இடைஞ்சல்களாக உள்ளன; முதலில் அவைகளை அகற்றுவதற்கு முயற்சிக்கப்படும்; இயலாவிட்டால், ஒவ்வொரு கடைக்கும் குறிப்பிட்ட அளவு இடத்தை ஒதுக்கிவிட்டுச் சீர்படுத்த முயற்சிப்போம்; மாநகராட்சிக்கு அதன்மூலம் வருவாயும் கிடைக்கலாம்.

தெருக்களில் கால்நடைகள் திரிவதைத் தடுக்க, தெரு ஓரங்களில் மாட்டுக் கொட்டகைகள் கட்டுவது குறித்து விரைவில், போலீசுக் கமிஷனருடன் விவாதிக்க உத்தேசித்திருக்கிறேன். கண்டபடி தெருவில் திரிய விடும் மாட்டுச் சொந்தக்காரர்களுக்குப் போலீசு கடுந் தண்டனை விதிக்க வேண்டும். இதற்கு ஊர்க்காவல் படையினரையும், விசேட ஆயுதப் படைப் போலீசையும்கூடப் பயன்படுத்திக்கொள்ளலாம்."

மெரீனா கடற்கரை பொலிவிழந்ததாகக் கூறப்படும் புகார்கள் பற்றிக் கேட்டதற்கு, மெரீனா சீர்திருத்தத் திட்டம்பற்றிப் பொதுப் பணித்துறை அமைச்சருடன் பேசி முடிவு செய்வதாக மேயர் கூறினார்.

இந்தி வெறியரின் புதிய யோசனை

வட்ட மேசை மாநாடு கூட்ட வேண்டுமாம்!

புதுடில்லி, நவ. 19—

"மொழிப் பிரச்சினையில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவதற்காக மத்திய அரசு, வட்ட மேசை மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டும்; இம்மாநாட்டில் இந்தி பேசும் பகுதி மக்களும் -- இந்தி பேசாத பகுதி மக்களும் கலந்து கொண்டு மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேணடும்"

என்று, இந்தி வெறியர் சேத் கோவிந்த தாஸ், அறிக்கை ஒன்றில் யோசனை தெரிவித்திருக்கிறார்.

"இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாக்க இந்தி, 'இணைப்பு மொழி'யாக இருக்க வேண்டும்" என்று கூறும் அவர், 'இந்தி பேசும் பகுதி மக்கள், எவ்விதத் தனிச் சலுகையும் கோரவில்லை' எனப் பசப்பியிருக்கிறார்.

வெறும் பேச்சு வேண்டாம்!

புதுடில்லி, நவ 19—

இந்தியாவில் சிறிய மோட்டார் கார் உற்பத்தி பற்றிய தகராறு பத்தாண்டுகளுக்கு மேலாகவே நடைபெற்றுக்கொண்டு வருகிறது; சிறிது காலம் இந்தத் தகராறு ஓய்ந்திருந்தது.

ஆனால், கடந்த வாரம் மக்களவையில் தெரிவிக்கப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து மீண்டும் இத்தகராறு துவங்கிவிட்டது; இது பற்றி ஒரு கூட்டத்தில் பேசுகையில் எஸ். கே. பாட்டில் கூறியதாவது:—

"சிறிய மோட்டார் உற்பத்தியைப் பற்றி ஓயாமல் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, ஏதாவது செயலில் இறங்குங்கள்.

"இந்தச் சிறிய கார் உற்பத்தி என்பது நாளடைவில் மிகவும் குறுகி, இறுதியில், 'சிறிய மோட்டார் உற்பத்தித் திட்டமே இல்லை' என்று ஏற்பட்டுவிடலாம்!

"காலஞ்சென்ற சர்தார் வல்லபாய் பட்டேல், எதைப் பற்றியும் முன்கூட்டியே பேசுவதில்லை; காரியத்தைச் செய்த பிறகுதான் பேசுவார்; அந்தப் படிப்பினையை இந்திய அரசு கற்றுக்கொள்ள வேண்டும்."

மதுரைக் கல்லூரி பேரவை துவக்க விழா

அமைச்சர் சிறப்புரை

மதுரைக் கல்லூரிப் பேரவை துவகக விழா, 11—11—68 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாலை 3-30 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகியது; கல்லூரி முதல்வர் திரு. வரதாச்சாரி தலைமை வகித்தார்; முதலில், கல்லூரிப் பேரவைப் பொதுச் செயலாளரும் திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்பாளருமான, மருதவிநாயகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மாண்பு மிகு சுகாதார அமைச்சர் சாதிக்பாட்சா அவர்கள், பேரவையைத் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

கல்லூரிப் பேரவை துணைச் செயலர் பெரியசாமி நன்றி கூறினார்.

இவ்விழாவில் மத்திய தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராசன் அவர்களும் கலந்துகொண்டார்.

முழு மதுவிலக்கு எப்போது?

'சொல்ல இயலாது' என்கிறார் டில்லி அமைச்சர்

தமிழகம் -- குசராத் தவிர வேறெங்கும் முழுமையாக மதுவிலக்குச் செயல்படுத்தப்படவில்லையாம்

புதுடில்லி, நவ. 19—

"நாடு முழுவதிலும் முழு மதுவிலக்கு எப்போது செயலபடுத்தப்படும் என்பதைச் சொல்லுவது இயலக்கூடிய ஒன்றல்ல"

என்று மக்களவையில், சமூக நலத் துணையமைச்சர் புலுரேணு குகா கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

'நாடு முழுவதிலும் இன்னும் ஏழாண்டுகளுக்குள் முழு மதுவிலக்கைச் செயல்படுத்த வேண்டும்' என்று கோவாவில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரசு மாநாட்டில தீர்மானம் நிறைவேற்றப்பட்டது தெரிந்ததே; இது பற்றியே கேள்விகள் கேட்கப்பட்டன; அமைச்சர் மேலும் கூறியதாவது:—

"மதுவிலக்கைச் செயல்படுத்துவதா வேண்டாமா என்பது பற்றி மாநில அரசுகள், தங்கள் விருப்பப்படி முடிவு எடுத்துக் கொள்ளும்.

"இப்போது தமிழ்நாடு, குசராத் ஆகிய மாநிலங்கள்தான் மதுவிலக்கை முழுமையாகச் செயல்படுத்திவருகின்றன.

"இராஜஸ்தான் மாநிலம், படிப்படியாக மதுவிலக்கைச் செயல்படுத்தப்போவதாக அறிவித்திருக்கிறது."

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் விளம்பரம்

குறிப்பு எண் S.C.E. 103

மூடி முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் -- அதன் உறையில், "தமிழக மின்சார வாரியம், எண்ணூர் அனல் மின் திட்டம், குளிரவைக்கும் தண்ணீர் உட்புகும் இடத்தில் பக்கிங்காம் கால்வாய் வெள்ளத் தடுப்புக் கரைக்கு முன்பே உருவாக்கிய சிமெண்டு கான்கிரீட் பலகைகளால் லைனிங் அமைத்தல்" எனவும், மற்றும் டெண்டர்தாரரின் பெயரும் எழுதப்பட்டுக் கீழ்க் கையொப்பமிட்டவரால் அவரது அலுவலகத்தில் 10—12—68 மாலை 3-மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். டெண்டர்கள் அன்று மாலை 3-30 மணிக்கு அங்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும்.

2. டெண்டர் பிரதிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 10 (பத்து ரூபாய் மட்டும்) கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை, எக்காரணங்களுக்காகவும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. இந்த வேலைக்குப் பிணைத் தொகை ரூ 2,000 (இரண்டாயிரம் ரூபாய் மட்டும்); இத்தொகையை ரொக்கமாகக் கீழ்க் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதை டெண்டருடன் இணைக்க வேண்டும்.

4. துறையினரைச் சார்ந்த நமூனாக்களில் இல்லாத டெண்டர்களும், இறுதித் தேதிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட டெண்டர்களும் நிராகரிக்கப்படும்.

5. டெண்டர்களில் ஏதாவது ஒன்றையோ, யாவற்றையுமோ காரணம் காட்டாது நிராகரிக்கவும், வேலையை டெண்டர்தாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் கீழ்க் கையொப்பமிட்டவரே உரிமையுடையவர்.

6. அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, வழியில் காணமல் போகும் டெண்டர் பத்திரங்களுக்கு மின்சார வாரியம் பொறுப்பல்ல.

டெண்டர் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

தலைமை நிர்மாணப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
எண்ணூர், சென்னை-57.

தொலைபேசி எண்: 59389
தந்தி: 'ENTERMAL'

காஷ்மீருக்காகத் தியாகமாம்!

பாகிஸ்தான் அமைச்சரின் புலம்பல்!

புதுடில்லி, நவ. 19—

"காஷ்மீர் மக்களுக்காக பாகிஸ்தான் கணிசமான அளவுக்குத் தியாகம் செய்துள்ளது; மேலும் தியாகம் செய்வதற்கும் தயங்கப்போவதில்லை; ஐ. நா. பாதுகாப்புக் குழுவிலும் காஷ்மீர் பிரச்சினையை முறைப்படி உரிய நேரத்தில் எழுப்பும்"

என்று பாகிஸ்தானின் அயல் நாட்டு அமைச்சர் அர்ஷாத், இராவல்பிண்டி அனைத்து நாட்டு விவகாரக் கழகத்தில் பேசுகையில் பேசுகையில் கூறினார்.

சிவகாசியில்

மாநகராட்சி வெற்றிவிழா

10—11—68-ல், சவுந்தரபாண்டியனார் நினைவு மன்றத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தி. மு. க. தேர்தல் வெற்றி விழாப் பொதுக் கூட்டம், மணிக்கட்டி ஊரணி சமீபம் உள்ள திடலில், தோழர் எஸ். எம். பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் ஏ. துரைக்கண்ணன், கா. மு. மதார், சி. பெ. குருசாமி, வே. கருணாகரன், எம். எஸ். தங்கமணி, ஏ. எஸ். கனி, மற்றும் கழகத் தோழர்கள் பலரும் பேசினர்.

அரிசிக் கடைக்காரர்கள் செய்யும் தில்லுமுல்லுக்கு முற்றுப்புள்ளி!

ரேஷன் கார்டுடன் கூப்பன் கொடுக்க ஏற்பாடு

பொங்கல் நாள்முதல் புதிய முறை செயல்படும்

சென்னை, நவ. 19—

சென்னை நகரில் 'ரேஷன்' கார்டுகளுடன் 'கூப்பன்'களும் வழங்கப்படும். 'கூப்பன்' கொடுத்தால்தான் அரிசி தரப்படும்.

இந்த ஏற்பாடு 1969 சனவரி 14-ம் நாள் முதல் -- அதாவது பொங்கல் நாளன்று அமுலுக்கு வரும்.

வாரத்துக்கு ஒரு கூப்பன் வீதம் ஓராண்டுக்கு 52 'கூப்பன்'கள் அடங்கிய ஒரு புத்தகம் 'ரேஷன்' கார்டுக்காரர்கட்கு -- 'ரேஷன் கார்டு'களுடன் வழங்கப்படும்.

ஒவ்வொரு தடவை அரிசி ரேஷன் வாங்கும்போதும் ஒரு கூப்பனை கடைக்காரரிடம் ரேஷன் கார்டுகாரர்கள் கொடுத்துவிட வேண்டும்.

ஒவ்வொரு கூப்பனிலும் அதன் வரிசை எண் -- ரேஷன் கார்டு எண் -- வாரம் இவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

நகரில் ரேஷன் கார்டுகளை வழங்குவதற்காகக் கணக்கெடுக்கும் பணி, டிசம்பர் இரண்டாவது வாரம் துவங்கும்.

சனவரியில் புதிய கார்டுகள் வழங்கப்படும்; அத்துடன் கூப்பன் புத்தகங்களும் வழங்கப்படும்.

ஏற்பாட்டின் நோக்கம்?

ரேஷன் கார்டுகள் மீது வியாபாரிகள் தில்லுமுல்லு செய்வதை இந்த ஏற்பாட்டின் மூலம் தடுக்க முடியும் என்று அதிகாரிகள் கருதுகின்றனர்.

இப்போது ஒரு ரேஷன் கடையில் 100 கார்டுகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம்; சிலர் அரிசி வாங்காமலிருந்தால் அவ்வாறு ரேஷனில் விற்கப்படாத அரிசியின் அளவை வியாபாரிகள் கையிருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்; ஆனால், சில வியாபாரிகள் இந்த அரிசியை வேறு நபர்களுக்கு விற்று அதிக இலாபம் சம்பாதிப்பதாகக் கூறப்படுகிறது; இதைத் தடுப்பதே இந்த ஏற்பாட்டின் நோக்கம் என்று அதிகாரிகள் கூறினர்.

சேர்ந்தாற்போல் ஒரு மாதத்திற்கு அரிசியை வாங்கிக் கொள்ளும் ஏற்பாட்டைப் பலர் பயன்படுத்திக் கொள்வதில்லை; எனவே, மொத்தமாக அரிசி வாங்கிக் கொள்ள விரும்புவர்களை, அரசினர் கடைகளுடனோ அல்லது அவர்களுடைய இடங்களுக்கு அருகில் உள்ள கூட்டுறவுக் கடைகளுடனோ இணைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

நகரில் 1966-ம் ஆண்டில் மாதந்தோறும் ரேஷனில் 12,000 டன் அரிசி வழங்கப்பட்டது; இப்போது 19,000 டன்னுக்கு உயர்த்தப்பட்டது.

நாள்தோறும் 600 டன் புழுங்கல் அரிசியும், 100 டன் பச்சரிசியும் ரேஷனில் வழங்கப்படுகிறது.

சர்க்கரை மற்ற பண்டங்களை வழக்கம் போல ரேஷன் கார்டுகளில் வாங்கிக் கொள்ளலாம்.

அரிசி வாங்கும்போது கூப்பனை மட்டும் வியாபாரியிடம் கொடுத்துவிட வேண்டும்; சம்பந்தப்பட்ட வியாபாரிகள் மத்திய டிப்போவில் இந்தக் கூப்பன்களைக் கொடுத்துவிடுவர்.

இந்தக் கூப்பன்களைக் கொண்டு ஒவ்வொரு வியாபாரியும் எவ்வளவு அரிசி விற்றார் -- அவரிடம் உள்ள அரிசி கையிருப்பு எவ்வளவு -- என்பதைக் கணக்கில் கொண்டு வியாபாரிகளுக்கு சிவில் சப்ளை அதிகாரிகள் 'கோட்டா' ஒதுக்குவர்.

ரோஜா

பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

கலை நிகழ்ச்சி

ஈரோடு எம். ஜி. ஆர். ரசிகர் மன்றத் திறப்பு விழாவையொட்டி 21—11—68 மாலை 7-மணிக்கு பள்ளிப்பாளையம் ஆர். கே. திடலில் சென்னை குமாரி விஜயா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

சுகாதார அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா நிகழ்ச்சிகள்

நவ. 21: காலை 9-30 மணி: மாதலம்பை பள்ளிக்கட்டிடத் திறப்பு விழா; 10 மணி: துரிஞ்சாபுரம் உள்ளாட்சி வரவேற்பு; 11 மணி: நார்த்தாம்பூண்டி சுகாதார நிலைய அடிக்கல் நாட்டுவிழா; பகல் 12 மணி: நாயுடுமங்கலம் மேல்மட்ட நீர்த்தொட்டி அடிக்கல் நாட்டுவிழா; மாலை 3 மணி: கரியம்பாடி பள்ளித் திறப்புவிழா; 4 மணி: கலசபாக்கம் ஊராட்சி வரவேற்பு; 5 மணி: போளூர் பாலத் திறப்பு; 7 மணி: திருவண்ணாமலை பொது வரவேற்பு.

டில்லி பயணம்

தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் மத்திய வாக்கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு 22-11-68 காலை 9-10 மணிக்கு விமானம் மூலம் டில்லிக்குப் பயணமாகிறார்; 25—11—68 பகல் 12-45 மணிக்கு சென்னை வந்தடைவார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவையில் அப்போது அமைதி குலைந்திருந்தது.

அமைதியாக இருக்கும்படி அவைத் தலைவர் சஞ்சீவியார் கேட்டுக்கொண்டார்; இருப்பினும், கேரள மாநில உறுப்பினர்கள் அதைப் பொருட்படுத்தாமல் கிருஷ்ணமூர்த்தியுடன் சேர்ந்துகொண்டு குறுக்கே எழுந்து பேசினர். அதனால் அவையில் கூச்சலும் குழப்பமும் நிலவின.

அந்தக் கூச்சலையும் மீறி தோழர் கிருஷ்ணமூர்த்தி பேச முயன்றார்.

அப்போது அவைத் தலைவர் சஞ்சீவியார் குறுக்கிட்டு கிருஷ்ணமூர்த்தியை நோக்கி, 'என்னப்பா, நீகூட இப்படிப் பண்ணலாமா?' என்று தமிழில் கேட்டார்.

தமிழ் அறிந்த உறுப்பினர்கள் அனைவரும் அதைக் கேட்டு 'கொல்' என்று சிரித்தனர்.

திரு. சஞ்சீவியார் ஆந்திரத்தைச் சேர்ந்தவர் என்றாலும் தமிழ் அறிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டணி வேட்பாளர் மூவர் வெற்றி

போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

புதுவை மாநில நகராட்சித் தேர்தல் நிலவரம்

புதுவை, நவ. 19—

புதுவை மாநில நகராட்சிக்கான தேர்தல்களில் கூட்டணி வேட்பாளர் மூவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த வேட்பாளர்களில் ஒருவர் மனப்பட்டு தி. மு. க. அவைத் தலைவர் ஆர். கோவிந்தராசு ஆவார்.

பாகூர் கொம்யூனில் இரு இடங்களிலும், காரைக்கால் பகுதியில் அம்பகரத்தூரிலும் கூட்டணி வேட்பாளர்கள் போட்டியின்றி வெற்றி வாகை சூடினர்.

வருகிற டிசம்பர் 16 அன்று புதுவை மாநிலத்தில் நகராட்சித் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறுகிறது.

புதுவை மாநில நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம், ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துப் போட்டியிடுவது தெரிந்ததே.

புதுவை பகுதியிலுள்ள நகராட்சி மன்றங்களின் மொத்த இடங்கள் 102 ஆகும்; 246 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

எல்லா இடங்களுக்கும் காங்கிரசுக் கட்சியும், தி. மு. க.—கம்யூனிஸ்டு—உழைப்பாளர் கட்சி—முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் உள்ளிட்ட கூட்டணியும் போட்டியிடுகின்றன.

கூட்டணி சார்பில் இரு பெண்களும் போட்டியிடுகின்றனர்.

முன்னாள் முதலமைச்சர் வெங்கடசுப்பா ரெட்டியார், முன்னாள் அமைச்சர் சுப்பிரமணிய படையாச்சி ஆகிய இருவரும் காங்கிரசு சார்பில் போட்டியிடுகிறார்கள்.

முன்னாள் முதலமைச்சர் குபேர் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

காரைக்கால் பகுதியில்:

காரைக்கால் பகுதியில் 153 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

இப்பகுதியில் 63 வார்டுகளில் காங்கிரசுக்கும்—கூட்டணிக்கும் நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ளது.

தேர்தலில் ஒழுங்கு நியதியை கடைபிடிக்க எல்லா அரசியல் கட்சிகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக காரைக்கால் போலீசு சூப்பிரண்டெண்டு தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இந்தி வகுப்பாம்

புதுடில்லி, நவ. 20—

மத்திய அரசின் கல்வியமைச்சுத் துறையைச் சேர்ந்த மத்திய இந்தி அலுவலகம், மத்திய அரசு ஊழியர்கட்கும் மத்திய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கட்கும் ஓராண்டு இந்தி வகுப்பு ஒன்றை நடத்தப் போகிறதாம்.

1969 சனவரி முதல் நாள் இந்த வகுப்பு துவங்குமாம்.

இத்தாலி அமைச்சரவை பதவி விலகியது

ரோம், நவ 19—

இத்தாலியில், தலைமையமைச்சர் கியோவானி லியோன் தலைமையில் உள்ள அரசு, இன்று இராஜினாமாச் செய்துவிட்டது.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"முன்னேற வேண்டும் என்ற ஆசைக்கு முடிவு என்பது எப்படி இருக்கமுடியும்"

என்ற பொருளினைக் குறிக்கும் பொருளாதார நூலிலுள்ள வரி ஒன்றினை எடுத்துக் கூறி --- பத்திரிகையாளர்களை வரவேற்றுக் கலந்துரையாடினர் வடஆர்காடு மாவட்டத்தின் ஆட்சியாளர் திரு. பெல்லியப்பா!

"உங்கள் மாவட்டம் மிகவும் பின்தங்கிய ஒன்று என அடிக்கடி அனைவராலும் கூறப்படுகிறது; இதுபற்றி என்ன சொல்லுகிறீர்கள்?" என நிருபர் ஒருவர் கேட்ட போது, அதற்கு அவர் எப்படி விடையளிக்கப் போகிறார் என்பதுதான் எங்கள் அனைவரின் ஆவலாக இருந்தது.

"ஆமாம்; 'பின்தங்கியது -- பின்தங்கியது' எனக் கூறுவதனைத்தான் நானும் வரவேற்கிறேன்; அப்போதுதான், 'முன்னேற வேண்டும்' என்ற உணர்வும் இருந்துகொண்டே இருக்கும்; அதற்கான உதவிகளையும் கேட்டுக்கொண்டே இருக்கலாம்"

என அவர் பதிலளித்தபோது, மாவட்டத்தினை முன்னுக்குக் கொண்டுவர அவர் கையாளும் 'மறைமுக' வழி எத்துணை சாதுரியமானது -- தந்திரமுள்ளது என்பது புரிய வந்தது!

ஆங்கில ஏகாதிபத்தியத்தினை எதிர்த்துப் புரட்சியின் முதல் வித்து முளைத்த இடம் இந்த மாவட்டத்தின் தலைநகரமதான்!

அதனால்தானோ என்னவோ -- இன்றும் இந்தியாவின் பாதுகாப்புக்கு ஏராளமான போர் வீரர்களைக் கொடுத்திருப்பதிலும் அது முதல் மாவட்டமாகத் திகழ்கிறது!

'17,500 இராணுவ வீரர்கள், வட ஆர்காடு மாவட்டத்தினைச் சேர்ந்தவர்கள்' என்ற சிறப்பான பெருமைக்கு உரிமையாகியிருக்கும் காரணத்தினால்தானோ என்னவோ -- அவர்களின் எதிர்கால நலனுக்கென ரூ. 4½ இலட்சம் மதிப்பில் -- பொது நிதியின்மூலம் -- கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது 'ஜவான்ஸ் பவன்' என்னும் கட்டிடம்! இதன்மூலம் வரும் வருவாய், முன்னாள் இராணுவத்தினரின் நல்வாழ்வுத் திட்டங்களுக்குப் பயன்படுகிறது!

முன்னேற்றத்தில் மக்களிடமே பொறுப்பினையும் பங்கினையும் தந்து நிறைவேற்றுவதில் திரு. பெல்லியப்பா மேற்கொண்டிருக்கும் மற்றொரு புதிய முயற்சி, கல்லூரிகளுக்கான கட்டிடங்கள் பற்றியதாகும். ரூ. 5 இலட்சம் பொது மக்கள் நிதி திரட்டித் தந்தால், தேவைப்பட்ட இடங்களில் அரசினர், கல்லூரி அமைத்துத் தருவது என்பது, இருந்துவரும் ஒரு நடைமுறை.

இதனைச் சற்று மாற்றியமைத்து, அதிக பலன் அளிக்கக்கூடியதாக்கியிருக்கிறார் இந்த மாவட்ட ஆட்சியாளர். வட்டார மக்கள் ரூ. 5 இலட்சம் பணமாகத் திரட்டித் தருவதற்குப் பதிலாக அந்த மதிப்புள்ள கட்டிடங்களைக் கட்டித் தருமாறு செய்துவிடுவதால் துவங்கும் நிலையிலேயே கல்லூரி வசதிமிக்கதாக இருக்க வாய்ப்பு ஏற்படுகிறது. பணத்தை மட்டும் திரட்டி -- பெயருக்கு ஏதாவது ஓர் இடத்தில் கல்லூரியைத் துவக்கிவிட்டு -- பின்னர் நிலையான இடம் அமைப்பதில் ஏற்படும் தாமதத்தினை இத்திட்டம், துவக்கத்திலேயே கிள்ளியெறிந்துவிடுகிறது. இந்தச் சீரிய முயற்சியில் உருவாகியிருப்பதுதான் செய்யாறு—வாலாஜா—திருவண்ணாமலை ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகள்!

தமிழகத்திலேயே நெல் உற்பத்தியில் இரண்டாவது இடம் வகிப்பது வட ஆர்காடு மாவட்டம்.

காட்டு வளம் கொழிக்கும் ஜவ்வாது -- ஏலகிரிப் பகுதியிலிருந்து மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ. 7.50 இலட்சம் வருமானம் கிடைக்கிறது.

இந்த மாவட்டத்துக்கு 1967—68-ம் ஆண்டுகளில் சாத்தனூர் நீர்த் தேக்கத்தின் மூலம் விடப்பட்ட அதிகப்படியான தண்ணீர் மூலம் 51,221 ஏகரில் நெல் விளைச்சல் உயர்ந்திருக்கிறது.

'ஐ.ஆர்.-8' ரக நெல் உற்பத்தியின் மூலம் 4485 கிலோ கிராம் விளைச்சலை ஓர் ஏக்கர் நிலத்தில் சாதித்துக்காட்டிய விவசாயி இந்த மாவட்டத்துக்காரர்தான்!

தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள பகுதிகளில் கூட்டு முயற்சியுடன் தோண்டப்படும் பொதுக் கிணறுகள் நடைமுறையில் இருப்பதும் வட ஆர்காடு மாவட்டத்தில்தான்! பதினெட்டு ஒன்றியங்கள் இதுவரை எடுத்திருக்கும் இது போன்ற கிணறுகளின் எண்ணிக்கை 53; அவற்றில் ஒன்றின் பாசத்தினால் உருவாகியிருக்கும் ஊராட்சித் தோட்டத்தின் குளிர்ந்த நிழலில் சில நிமிட நேரம் அமர்ந்து அதன் சீரிய தன்மைகளை உணரும் ஒரு வாய்ப்பும், செய்தியாளர் குழுவுக்குக் கிட்டியது!

வட ஆர்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரிய கனரகத் தொழிற்சாலைகள் இல்லையென்றாலும், சிறிய அளவு தொழிற்சாலைகள் நூற்றுக்கு மேல் இருக்கின்றன. மாவட்டத்தின் பெருமைக்கு அணி சேர்க்கும் வட புதுப்பேட்டை சர்க்கரைத் தொழிற்சாலை, கூட்டுறவுத் துறையில் அமைந்த சர்க்கரை ஆலைகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக மாநிலத்திலேயே முதன்மை பெற்றதாக இருக்கிறது.

மக்களை நோக்கி நிர்வாகத்தைக் கொண்டு சென்ற பெருமையிலும் வட ஆர்காடு மாவட்டம்தான் முதலில் நின்றிருக்கிறது.

'உயர்மட்ட அதிகாரிகளால் உடனடியாக நிறைவேற்ற முடியும்' என்ற அடிப்படையுள்ள மக்களின் கோரிக்கைகள் -- 'பைல் கட்டுகளின் சிக்கலில் ஈடுபட்டுக் காலதாமதத்துக்குப் பலியாக வேண்டியதில்லை' என்ற நோக்கத்துடன் --- தொடர்புள்ள அதிகாரிகளை மக்கள் இருப்பிடங்களுக்கே சென்று அக்குறைகளை நேருக்கு நேர் அகற்றும் உத்தியை அமுலாக்கியவர் திரு. பெல்லியப்பாதான்.

வேலூர், குடியாத்தம், போளூர் போன்ற தாலுகாக்களில் வெற்றியளித்திருக்கும் இத்திட்டம், தற்போது செய்யாறு பகுதியில் பலனளித்துக் கொண்டிருக்கிறது!